பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 | வள்ளுவர் ஆண்டு 2051 | ஆனி 19 | வெள்ளிக்கிழமை | 03.07.2020 | கதிர் 108

# ஆட்ட நிர்ணய சதி நடக்கவேயில்லை!

## கிரிக்கெட் வீரர்களிடம் விசாரணையும் நடக்காது மஹிந்தானந்தவின் குற்றச்சாட்டு பொய்யாகியது



**கொழும்பு, ஜூலை 03**

**கிரிக்கெட் வீரர்கள் தரப்பில் எந்தவிதமான ஆட்ட நிர்ணயச் சதியும் இடம்பெறவில்லை. 2011 உலகக்கிண்ண இறுதிப் போட்டியில் ஆட்ட நிர்ணயம் இடம்பெற்றதா என்பதை ஆராய நடத்தப்பட்ட விசாரணைகளில், அந்தக் குற்றச்சாட்டு பொய்யானது என்பது கண்டறியப்பட்டுள்ளது.**

**- இவ்வாறு விளையாட்டுத் துறை அமைச்சின் விசேட விசாரணைப் பிரிவின் தலைவர் ஜகத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.**

2

## சமூகத்தொற்று அபாயமில்லை!

கொழும்பு, ஜூலை 03

கொழும்பு 13 ஜிந்துப்பிட்டியில் கொரோனா தொற்றுடன் ஒருவர் அடையாளம்காணப்பட்டதால்யாரும் அச்சமடைய வேண்டியதில்லையெனச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

தனிமைப்படுத்தல் நிலையத்தில் இருந்து வீடு திரும்பி, தனிமைப்பட்டிருந்த ஒருவர் நேற்று கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டிருந்தார்.

அவருடன் தொடர்பில் இருந்த அந்தப் பகுதியைச் சேர்ந்த 154 பேர் தனிமைப்படுத்தல் மையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

அந்த நோயாளியிடமிருந்து சமூகத் தொற்று ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை. சமூகத் தொற்றினால் அவர் பாதிக்கப்பட்டிருக்கவில்லையென அனில் ஜாசிங்க கூறினார்.

## இலங்கை குறித்து 10ஆம் திகதி அறிக்கை

ஜெனிவா, ஜூலை 03

தற்போது நடந்து வரும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 44ஆவது கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பான அறிக்கை எதிர்வரும் 10ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ளது. அதனைத் தொடர்ந்து விவாதமும் இடம்பெறவுள்ளது.

2

## 20 பொலிஸ் அதிகாரிகளுக்கு இடமாற்றம்!

கொழும்பு, ஜூலை 03

20 பொலிஸ் அதிகாரிகளுக்கு அதிரடியாக இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இதில் பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் மூவரும் உள்ளடங்குகின்றனர்.

தேர்தல்கள் ஆணைக்குழுவும், தேசிய பொலிஸ் ஆணைக்குழுவும் இந்த இடமாற்றங்களுக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளன.

9 பதில் பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள், 6 சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள், 2 உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள் உள்ளிட்டவர்களே இடமாற்றத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

2

## நெடுந்தீவில் வந்திறங்கிய இந்தியப் பிரஜை கைது!

இந்தியப் பிரஜை ஒருவர் தெப்பம் ஒன்றில் கடல் வழியாகப் பயணித்துநெடுந்தீவுப்பகுதிகரையை வந்தடைந்துள்ளார்.

இவர் நேற்று மதியம் 12 மணியளவில் நெடுந்தீவின் தென்பகுதி கடற்கரை அடைந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

கொரோனா அச்சம் நிலவி வரும் நிலையில் இவர் இவ்வாறு வந்துள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியது.

2

## 426 கிலோ கிராம் கஞ்சா இன்று மண்டைதீவுக் கடலில் சிக்கியது

### படகு இயந்திரத்துடன் ஒருவர் கைதாகினார்

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மண்டைதீவுப் பகுதியில் 426 கிலோ கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. இதனைக் கடத்துவதற்குப் பயன்பட்டதாகக் கூறப்படும் படகு இயந்திரம் ஒன்றுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

2

## வேகக்கட்டுப்பாட்டை இழந்து கடலுக்குள் பாய்ந்தது வாகனம்

யாழ்ப்பாணம், ஜூலை 04

காரைநகரிலிருந்து பொன்னாலை நோக்கிப் பயணித்த படி ரக வாகனம் வேகக்கட்டுப்பாட்டையிழந்து கடலுக்குள் பாய்ந்தது.



தெய்வாதீனமாகச் சாரதி எந்தப் பாதிப்புமில்லாமல் தப்பித்தார்.

இந்தச் சம்பவம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் இடம்பெற்றது.

நீர் வழங்கல் அதிகார சபையின் நீர்விநியோகக்குழாயில் படி ரக வாகனம் பொறுத்துக் கொண்டாதால் சேதம் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

## பணிந்தது அரசு!

### விளையாட்டு வீரர்கள் இனிமேல் விசாரணைக்கு அழைக்கப்படார்

கொழும்பு, ஜூலை 03

2011ஆம்ஆண்டு உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் ஆட்ட நிர்ணயச்சதிஇடம்பெற்றதாஎன்பதை விசாரணை செய்ய இனிமேல் கிரிக்கெட் வீரர்களை அழைக்கமாட்டோம் என விசேட விசாரணைப் பிரிவு அறிவித்துள்ளது.

கௌரவமான, மூத்த வீரர்களை விசாரணைக்கு அழைத்து அரசு அவமதிக்கிறது என சமூக வலைத்தளங்களில் கொந்தளிப்பு எழுந்த நிலையில், இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

2

## மிதிவெடி அகற்றும்போது இயக்கச்சியில் வெடிப்பு!

### 3 பிள்ளைகளின் தாய் காயம்

கிளிநொச்சி, ஜூன் 03

கிளிநொச்சி, இயக்கச்சி நித்தியவெட்டைப் பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்தபோது ஏற்பட்ட வெடிப்புச் சம்பவத்தில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுப்பட்டிருந்த பெண் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இன்று காலை 8.45 மணியளவில் இயக்கச்சி நித்திய வெட்டைப் பகுதியில் ஹலோட்ரஸ்ட் நிறுவனத்தின் பணியாளர்கள் மனிதநேயக் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுப்பட்டுக்கொண்டிருந்த

2

## யானைக்கு வைத்த மின்சாரத்தால் பறிக்கப்பட்ட இரு மனித உயிர்கள்!

### வவுணதீவில் துயரச் சம்பவம்

மட்டக்களப்பு,ஜூலை 03

மட்டக்களப்பு, வவுணதீவுப் பிரதேசத்தில் காட்டு யானைக்கு வைக்கப்பட்ட மின்சாரம் தாக்கி இருவர் உயிரிழந்துள்ளனர்.

ஆயித்தியமலை பொலிஸ் பிரிவிலுள்ள உன்னிச்சை, கரவெட்டியாறு கிராமத்தில் இந்தச் சம்பவம் இன்று வெள்ளிக்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

2





காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# பொருளாதாரத்தை கட்டியெழுப்ப கோட்டாவின் அரசு தவறியுள்ளது

## கிளிநொச்சியில் சஜித் குற்றச்சாட்டு

**கிளிநொச்சி, ஜூலை 03**

**கொரோனாவினால் பின்னடைவை சந்தித்துள்ள நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பாமல் அரசாங்கம் தான்தோன்றிதனமான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றதென ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சியில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

கிளிநொச்சியிலுள்ள 4 பிரதேச செயலகங்கள் உள்ளடங்களாக 397 கிராமங்களில் இருந்து வருகைதந்துள்ள இந்த மக்களைச் சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

அத்துடன் கடற்றொழிலை நம்பி வாழ்பவர்களே இங்கு பெரும்பாலானோர் இருக்கின்றார்கள். அவர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியிலேயே தங்களது அன்றாட செயற்பாடுகளை முன்னெடுத்து செல்கின்றனர்.

எனவே அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்ந்த நிலைமைக்கு கொண்டுச்செல்லும் வகையில் சிறந்த திட்டங்களை நிச்சயம் நான் முன்னெடுப்பேன்.

எனக்கு ஞாபகம் இருக்கிறது. நான் பதவியில் இருந்த வேளை வீட்டுத்திட்டங்களை அமைத்துக்கொடுத்தேன்.

என்னை வெற்றியடைய செய்தால் எதிர்வரும் காலங்களிலும் காணி மற்றும் வீடு தொடர்பான பிரச்சினைக்கு தீர்வை வழங்க செயற்றிட்டங்களை நிச்சயம் முன்னெடுப்பேன்.

கிளிநொச்சி - யாழ்ப்பாணம் உள்ளிட்ட பகுதிகளில் நிலவும் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்கு எமது கட்சியை சார்ந்தவர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்பி, அதனூடாக தீர்வைப் பெற்றுக்கொடுப்பேன்.

கிளிநொச்சியில் 95 கிராம சேவகர் பிரிவில் 397 கிராமங்கள் உள்ளன. இவைகளுக்குச் சிறந்த அபிவிருத்திகளை முன்னெடுப்பேன்.

அத்துடன் தொழிலற்றவர்களுக்கான வேலைவாய்ப்பு, கல்வி, சுகாதாரம் ஆகியவை வறுமைக்கோட்டிலுள்ள அனைத்து மக்களும் பெற்றுக்கொள்ளும் வகையில் வழங்குவேன்.

அந்தவகையில் எதிர்வரும் 5 ஆம் திகதி வெற்றியடைந்ததன் பின்னர் பல மாதிரி கிராமங்களை உருவாக்கி வறுமைக்கோட்டிலுள்ள அனைத்து மக்களினது வாழ்க்கையும் மேலும் மேன்மையடைய செய்வேன். இங்குள்ள 397 கிராமங்களையும் நான் பொறுப்பேற்பேன்.

இதேவேளை மக்களுக்கு சேவை செய்ய தெரியாத அரசாங்கமே தற்போது நாட்டில் காணப்படுகின்றது.

மேலும் 2011 ஆம் ஆண்டு உலக கிண்ண ஆட்ட நிர்ணய சதி தொடர்பாக இலங்கையின் சிறந்த வீரர்களான மஹேல ஜெயவர்தன, குமார் சங்ககார மற்றும் முத்தையா முரளிதரன் ஆகியோர் தற்போதைய அரசால் எவ்வாறு நடத்தப்படுகின்றார்கள்.


இந்த வீரர்கள், நாட்டை ஒருபோதும் காட்டிக்கொடுக்கவில்லை என்பதை உறுதியாக கூறமுடியும். ஆனால் தற்போதைய அரசு அவர்களின் கௌரவத்தை பாதிக்கும் வகையில் செயற்படுகின்றது. ஆகவே நாம் ஆட்சிக்கு வந்தவுடன் அவர்களின் கௌரவத்தை பாதுகாப்போம்.

அத்துடன் அரசு வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை கட்டியெழுப்புவது எவ்வாறு என்பது தொடர்பாக சிந்திக்காமல் வீணாக இந்த விவகாரத்தில் நேரத்தை செலவிடுகிறது.

ஆகவே, நாம் பொதுத்தேர்தலில் வெற்றியடைந்தன் பின்னர், முதலில் நாட்டை கட்டியெழுப்புவது தொடர்பாகவே அதிக கவனம் செலுத்த இருக்கின்றோம் - என்றார்.

# கோட்டாவின் சர்வாதிகாரத்தினால் மக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர்

## விக்ரமபாகு குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூலை 03

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சர்வதிகாரத்தினால் மக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர் என நவசமசமாஜக் கட்சியின் தலைவர் விக்ரமபாகு கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தனது முகம் பதிந்த ஒளிபடத்தை காட்சிப்படுத்தி, தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட வேண்டாமென கூறியுள்ளார்.

இதற்குக் காரணம், ஜனாதிபதியின் ஒளிபடத்தை காட்சிப்படுத்தினால் வாக்குகளின் எண்ணிக்கை குறைவடையும். ஆகவேதான் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மக்களுக்கு ஏகாதிபத்திய ஆட்சி மீது வெறுப்பு ஏற்பட்டிருந்தது. ஆனாலும் பிரதமர் மஹிந்த, செயற்பாடுகளை முன்னெடுக்க ஆரம்பித்த பின்னர்தான், வெறுப்புணர்வு ஓரளவு குறைந்து காணப்படுகின்றது.

அதாவது கோட்டாவின் ஹிட்லர் முகத்தை முன்நிறுத்தி இராணுவம் சர்வதிகாரம் என்றதன் அடிப்படையில் தேர்தல் பிரசாரங்களை முன்னெடுத்தால் மக்களிடம் அதிருப்தி ஏற்படும்.

ஆகவேதான் மஹிந்த ராஜபக்ஷவை முன்னிறுத்தி தேர்தல் பிரசாரங்களில் பொதுஜன பெரமுன ஈடுபட்டு வருகின்றது - என்றார்.

## 476 கிலோ கிராம் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்தச் சம்பவம் இன்று காலை இடம்பெற்றுள்ளது.

மண்டதீவு கடற்கரைப் பகுதியில் மர்மமான முறையில் படகு ஒன்று நின்றுள்ளது. அந்தப் படகைக் கடற்படையினர் சோதனையிட்டபோது அதற்குள் சந்தேகத்துக்கிடமான மூடைகள் காணப்பட்டன.

அவற்றைக் கடற்படையினர் சோதனையிட்டபோது அதில் கஞ்சா இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

426 கிலோ எடையுள்ள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்தச்சம்பவம் தொடர்பில் கடற்படையினரும் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் குருநகர்ப் பகுதியில் வைத்து சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். படகுக்கு பயன்படுத்தப்பட்டதாக கூறப்படும் இயந்திரம் ஒன்றும் அவரிடம் மீட்கப்பட்டுள்ளது.

## மிதிவெடி அகற்றும்போது ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
போது எதிர்பாராதவிதமாக வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது கிளிநொச்சி இரத்தினபுரத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயாரான 35 வயது மதிக்கதக்க பெண் ஒருவரே முகத்தில் காயமடைந்துள்ளார்.

## யானைக்கு வைத்த .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யானைப் பாதுகாப்பு வேலியையும் தாண்டி காட்டுயானைகள் தமது பயிர்களை அழித்து வருவதால், அவற்றிடமிருந்து தமது வயலைப் பாதுகாப்பதற்காக விவசாயிகளால் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட வைன்டிங் கம்பி மின் வேலியில் சிக்கியே இந்த இருவரும் உயிரிழந்துள்ளனர்.

கரவெட்டியாறு கிராமத்தைச்சேர்ந்த 5 பிள்ளைகளின் தந்தையான முனிசாமி தங்கையா என்பவரும், அவரது மைத்துனரான 7 பிள்ளைகளின் தந்தையான சீனித்தம்பி மணிவண்ணன் ஆகியோரே இவ் விபத்தில் பலியாகியுள்ளனர்.

ஆயித்தியமலை பொலிஸார், கிராம உத்தியோகத்தர், மண்முனை மேற்கு பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் சுபா. சதாகரன் ஆகியோர் சம்பவ இடத்துக்குச் சென்று பார்வையிட்டுள்ளமையுடன் ஆயித்தியமலை பொலிஸார் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## பணிந்தது ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மஹேல ஜெயவர்த்தன இன்று விசாரணைக்கு அழைக்கப்பட்ட நிலையில், நேற்றிரவு முடிவை மாற்றி, அவர் வரத் தேவையில்லையென அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 20 பொலிஸ் அதிகாரி .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் புதிய பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ள பிரதிப் பொலிஸ்மா அதிபர் கே.அபோன்ஸோவின் இடமாற்றமும் இதில் உள்ளடங்குகின்றது.

## இலங்கை குறித்து ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இலங்கைக்கு கடந்த வருடம் பயணம் செய்த சுதந்திரத்துக்கான உரிமை மற்றும் அமைதியாக ஒன்று கூடுவதற்கான உரிமை தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் விசேட நிபுணரின் அறிக்கையே மனித உரிமைகள் சபையில் வெளியிடப்படவுள்ளது

ஏற்கனவே விசேட நிபுணரின் அறிக்கை வெளியிடப்பட்டுள்ள நிலையில், முதலில் விசேட நிபுணர் அந்த அறிக்கையின் சாராம்சத்தை வெளியிடுவார். சாராம்சம் சபையில் வெளியிடப்பட்டதும் விவாதம் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆட்ட நிர்ணய சதி .....................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
2011ஆம் ஆண்டு கிரிக்கெட் உலகக் கிண்ணத் தொடரின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் ஆட்ட நிர்ணயச் சதி தொடர்பில் இதுவரை பெற்றுக்கொள்ளப்பட்ட வாக்குமூலங்கள் போதுமானவையாகக் காணப்படுவதனால், எதிர்காலத்தில் வாக்குமூலம் பெற்றுக்கொள்வதற்காக கிரிக்கெட் வீரர்கள் விசேட விசாரணைப் பிரிவுக்கு அழைக்கப்படமாட்டார்கள் எனவும் அவர் குறிப்பிட்டார்.

2011 ஆம் ஆண்டு கிரிக்கெட் உலகக் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டியின்போது ஆட்ட நிர்ணயம் இடம்பெற்றதாக முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே அண்மையில் தனியார் ஊடகமொன்றில் இடம்பெற்ற நேர்காணல் ஒன்றில் கூறியதை தொடர்ந்து அது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரை இலங்கை அணியின் முன்னாள் வீரர் அரவிந்த டி சில்வா, முன்னாள் அணித் தலைவர் குமார் சங்கக்கார மற்றும் இலங்கை கிரிக்கெட் அணி வீரர் உபுல் தரங்க ஆகியோரிடம் வாக்குமூலங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

அத்துடன் இன்றைய தினம் மஹேல ஜயவர்தன விசாரணை குழுவுக்கு அழைக்கப்பட்டிருந்தார். ஆனால் அதன் பின்னர் அவருக்கு வாக்குமூலம் வழங்குவதற்கு வேறொரு தினம் வழங்குவதாக விளையாட்டுத் துறையின் விசேட விசாரணைப் பிரிவு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நெடுந்தீவில் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நெடுந்தீவில் வைத்து உடன் கைது செய்யப்பட்ட அவர் இன்று வெள்ளிக்கிழமை ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார்.

இதையடுத்து அவரை விடத்தல்பளையில் உள்ள தனிமைப்படுத்தல் நிலையத்தில் தடுத்து வைக்குமாறு மன்று உத்தரவிட்டுள்ளது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## முட்டாள்தனமான நகர்வு

"சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி' என்பார்கள்.

அப்படி ஒரு வேலையைச் செய்யப் போய் சர்வதேச ரீதியில் சூடு வாங்கத் தொடங்கியிருக்கின்றது இலங்கை அரசு.

இலங்கையில் யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் நீண்ட காலமாகக் குரல் எழுப்பி வருபவர். 'உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச திட்டம்' என்ற அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர்.

சர்வதேச ரீதியில் நாடுகளினாலும், ஐ.நா. உட்பட பல்வேறு சர்வதேச அமைப்புகளினாலும் மிக உன்னத நிலையில் மதிக்கப்படும் சர்வதேச நிபுணர். குறிப்பாக இடைக்கல நீதி, பால் மற்றும் சர்வதேசக் குற்றவியல் சட்டம் ஆகியவற்றில் தேர்ந்த நிபுணர். முன்னணி மனித உரிமைச் வழக்கறிஞர் - செயற்பாட்டாளர்.

அவரது தனித்துவச் சிறப்புகள், மனித உரிமைகள் விடயத்தில் விடாப்பிடியாக உறுதியான நிலைப்பாடு மற்றும் கொள்கைகள் காரணமாக ஐ.நா. உட்பட பல்வேறு அமைப்புகள் சர்வதேச நீதி தொடர்பான தமது செயற்பாடுகளுக்கான முதன்மைப் பிரதிநிதியாக அவரை சேவைக்கு அழைத்து வந்துள்ளன.

தென்னாபிரிக்கா, சியாரா லியோன், மத்திய ஆபிரிக்கக் குடியரசுகள், தென் சூடான் போன்ற பல நாடுகள் தொடர்பில் ஐ.நா. அமைப்புகள், ஐரோப்பிய ஒன்றியம் போன்ற பல சர்வதேச அமைப்புகள் நிறுவிய மனித உரிமைகள் நடவடிக்கைகளை உறுதிப்படுத்தும் பல ஸ்தாபனங்களில் மிக உச்சப் பொறுப்பான பதவிகளுக்கு அழைத்து நியமிக்கப்பட்டவர். இந்த விடயங்களில் நெல்ஸன் மண்டேலா போன்ற உயர் தலைவர்களினால் பெரிதும் மதித்து மெச்சப்பட்டவர்.

இலங்கையில் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல் செயற்பாடுகள், மனித குலத்துக்கு எதிரான நடவடிக்கைகள் போன்றவை தொடர்பில் சர்வதேச ரீதியில் குரல் கொடுத்து வருபவர் யஸ்மின் சூகா.

அதனால் இலங்கை அதிகாரபீடம் - குறிப்பாக மேற்படி சம்பவங்களினால் சர்வதேச நெருக்கடிகளையும், இராஜதந்திர அழுத்தங்களையும், உலகளாவிய நடவடிக்கை ஆபத்துக்களையும் எதிர்கொண்டிருக்கும் இலங்கைத் தரப்புகள் - யஸ்மின் சூகா அம்மையார் போன்ற மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் மீது அளவுக்கு அதிகமான எரிச்சல், கோபம், விசனம் கொண்டிருந்தன; கொண்டிருக்கின்றன.

சூகா அம்மையார் போன்ற மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களில் ஒருவர் மீது நடவடிக்கை எடுத்து இலங்கை தொடர்பாக அவரது வாயையும் செயற்பாடுகளையும் அடக்கி விட்டால் இவ்விவகாரத்தில் எப்போதும் சீறிக் கொண்டிருக்கும் சர்வதேச எதிர்ப்புணர்வை அடக்கி விடலாம் என்று கனவு கண்டது இலங்கைத் தரப்பு.

அத்தகைய முயற்சியை எடுத்து இப்போது வினையை விலைக்கு வாங்கியிருக்கின்றது அது.

யுத்தத்தின் இறுதிக் காலகட்டத்தில் - இப்போதைய இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டின் பாதுகாப்புச் செயலாளராக இருந்தபோது - அவரின் மிக நெருங்கிய உதவியாளராக இருந்தவரும், கோட்டாபய ஜனாதிபதியானதும் நாட்டின் புலனாய்வுச் சேவையின் தலைவராக நியமிக்கப்பட்டவருமான மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலேயை வைத்துக் காய் நகர்த்தத் தொடங்கியது இலங்கை அரசு.

மேஜர் ஜெனரல் சாலே தமது சட்டத்தரணி பாஸன் வீரசிங்க மூலம் யஸ்மின் சூகாவுக்கு எச்சரிக்கை விடுக்கும் நிபந்தனைக் கடிதத்தைக் கடந்த மாத முற்பகுதியில் அனுப்பினார்.

அந்த நடவடிக்கை சர்வதேச ரீதியின் இலங்கைக்கு எதிராகப் பெருங் கண்டனங்களையும் ஆட்சேபனைகளையும் கிளப்பி விட்டிருக்கின்றது.

ஐ.நாவின் மனித உரிமைகளுக்கான முன்னாள் ஆணையாளர்களான நவி பிள்ளை, சயீட் அல்ஹுசைன், இலங்கை தொடர்பான ஐ.நா. பொதுச் செயலாளரின் நிபுணர் குழு உறுப்பினர் மார்சுகி தருஸ்மன் என நூற்றியைம்பதுக்கும் மேற்பட்ட சர்வதேச நிபுணர்கள், சர்வதேச அமைப்புகளுடன் ஒரு தரப்பாக இணைந்து இலங்கை அரசின் இந்தப் போக்குக்காகப் பொங்கி எழுந்துள்ளனர்.

இலங்கை அரசின் இந்த நடவடிக்கையைக் கண்டித்து அத்தரப்பினர் எல்லோரும் ஒப்பமிட்டு பொது அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

*"இலங்கை அரசின் நடவடிக்கை யஸ்மின் சூகா அம்மையாருக்கு மட்டும் எதிரானதல்ல. அவருடைய பணியுடன் தொடர்புடையவர்கள், இலங்கையின் அத்துமீறிய நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டவர்கள், உயிர்தப்பியவர்கள் மீதான தாக்குதலாகும். உண்மையைக் கண்டறிந்து வெளிப்படுத்தும் செயற்பாடுகளுக்கும், நீதிக்கு ஆதரவான நடவடிக்கைகளுக்கும் எதிரான நேரடிப் பதிலடியாகும்.*

*"சூகாவுக்கு எதிரான இலங்கை அரசின் குற்றாட்டுகள் அடிப்படை சர்வதேச உரிமைகளை மீறும் நடவடிக்கை. இலங்கையில் நீண்ட காலமாக நீடிக்கும் அநீதி மற்றும் குற்றங்களிலிருந்த விலக்களித்துப் பாதுகாத்தல், பொறுப்புக் கூறலிலிருந்து தப்புதல் போன்றவற்றில் இருந்து சர்வதேச சமூகத்தின் கவனத்தைத் திசை திருப்பும் எத்தனமாகும்"* - என்று அந்தப் பகிரங்க அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனது தவறான அணுகுமுறை நடவடிக்கை மூலம் சர்வதேசப் பார்வை, அணுகுமுறை, கருத்தியலை தனக்கு எதிராகத் திருப்பச் செய்திருக்கின்றது இலங்கை. அதுதான் கடைசியாக நடந்தேறியுள்ளது.

# ரணிலுக்கு சவால் விடுகின்றார் சஜீவ



கொழும்பு, ஜூலை 03

கொழும்பில் ரணில் விக்ரமசிங்க ஐக்கிய மக்கள் சக்தியைவிட அதிக வாக்குகளைப் பெற்றால் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலக தயாராகவுள்ளார் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தேசிய சொத்துக்களை விற்று முடித்து, தற்போது கிரிக்கெட்டையும் நாட்டின் சிறந்த வீரர்களை அரசியல் நோக்கங்களுக்காக காட்டிக் கொடுக்கின்றனர்.

2011ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடரில் ஊழல் இடம்பெற்றுள்ளது என்பதை மஹிந்தானந்த அளுத்கமகே அறிந்திருந்தால் அதனை ஏன் அப்போதே வெளிப்படுத்தவில்லை?

இவ்வாறு ஒவ்வொரு பிரிவாக நாட்டைக் காட்டிக் கொடுப்பவர்கள் குறித்து மக்கள் சிந்திக்க வேண்டும். வாக்களிக்கும்போது மிகுந்த பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியும் இதே நிலைமையிலேயே காணப்படுகிறது. அதனால்தான் 26 வருடங்கள் ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் மக்களால் புறக்கணிக்கப்பட்டார்.

இம்முறை கொழும்பில் ரணில் விக்ரமசிங்க ஐக்கிய மக்கள் சக்தியைவிட அதிக வாக்குகளைப் பெற்றுக்கொண்டால் அல்லது தயா கமகே கூறியதைப் போன்று ஐக்கிய தேசியக் கட்சி 50 ஆசனங்களைப் பெற்றுக்கொண்டால் நான் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜிநாமா செய்யத் தயாராகவுள்ளேன் – என்றார்.

# மதத்தலங்களில் தேர்தல் பிரசாரம் முன்னெடுத்தால் வாக்குகள் ரத்து

கொழும்பு, ஜூலை 03

சமய வழிபாட்டுத் தலங்களில் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை முன்னெடுப்பது தேர்தல் சட்டங்களுக்கு அமைய முற்றிலும் தவறு என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தனியார் ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய நேர்காணலின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர்–

தற்போது சமய வழிபாட்டுத் தலங்களில் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் பெருமளவில் முன்னெடுக்கப்படுகின்றன. இது தேர்தல் சட்டங்களுக்கு முற்றிலும் முரணானது.

1981ஆம் ஆண்டு முதலாம் பிரிவு தேர்தல் சட்டத்திற்கமைய இது தவறானதாகும். ஆகவே இந்த வேட்பாளர்கள் வெற்றி பெற்றாலும் அவர்களின் வாக்குகள் இரத்துச் செய்யப்படும் எனக் கடுமையாக எச்சரிக்கின்றோம்.

இதேவேளை முன்னாள் பிரதி மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் சிலர் தற்போது அரச வாகனங்களை பயன்படுத்துகின்றனர் என அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சியின் வேட்பாளர்களே அது குறித்து முறையிடுகின்றனர்.



அதேபோல் அமைச்சரவையில் உள்ள சிலரும் இவ்வாறு அரச வாகனங்களைப் பயன்படுத்துவதாக முறைப்பாடுகள் கிடைக்கின்றன.

ஆகவே அரச வாகனங்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறு நாம் கேட்டுக்கொள்கின்றோம். அது பாரிய தேர்தல் விதி மீறலாகும். தற்போது தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு எதிராக கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

எந்த அடிப்படை காரணங்களும் இன்றி இவ்வாறான விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. சந்தேகங்கள் இருந்தால் ஆணைக்குழுவில் முன்வைக்க முடியும் – என்றார்.

# முன்னாள் அரச அதிபர் வேதநாயகத்தை பழி வாங்கும் நடவடிக்கை தொடர்கிறது

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஜூலை03

யாழ்ப்பாணத்தில் பணியில் இருக்கும்போது பழிவாங்கப்பட்ட முன்னாள் மாவட்டச் செயலாளர் ஓய்வின் பின்னரும் பழிவாங்கப்படுகிறார் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மாவட்டச் செயலாளராக பணியாற்றிய நா.வேதநாயகன் மே மாதம் 23ம் திகதியுடன் ஓய்வு பெற்றுச் செல்லவிருந்த நிலையில் தேர்தலை இலக்காகக்கொண்டு அரசியல்வாதியின் தூண்டுதலின் பெயரில் பெப்ரவரி மாதம் அவசரமாக இடமாற்றம் செய்யப்பட்டார்.

இவ்வாறு சேவையின் இறுதிக்கட்டத்தில் – 3 மாதங்களும் இல்லாத நிலையில் – இடமாற்றம் வழங்கப்பட்ட காரணத்தினால் மன விரத்தியடைந்த அவர் தம் சேவைக் காலத்தின் இறுதி மூன்று மாதங்களிற்கும் விடுமுறையைச் சமர்ப்பித்துவிட்டு தனது பணி ஓய்வுக் காலமான மே மாதம் 23 ஆம் திகதியில் இருந்து சேவையில் இருந்து ஓய்வைப் பெற்றார். இருந்தபோதும் ஓய்வில் சென்ற மாவட்டச் செயலாளரின் கோவையை ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பவிடாது அரசியல்வாதி ஒருவரின் தூண்டுதலின் பெயரில் தொடர்ச்சியாக அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன.

ஓய்வில் சென்ற மேற்படி மாவட்டச் செயலாளர் பணியில் இருந்த சமயம் தவறு இழைத்த சில அதிகாரிகளை உரிய ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்துத் தண்டித்தார் எனக் கூறப்படுகின்றது. அந்தத் தரப்புகளினால் அரசியல்வாதிகளுக்குத் தவறான தகவல்கள் வழங்கப்பட்டதன் பெயரில் அமைச்சினால் வேதநாயகனுக்கு எதிராக அவசர அவசரமாக ஓர் விசாரணைக்குழு அமைத்து விசாரணைகளும் இடம்பெற்றன.

அந்த விசாரணைகளில் முன்னாள் மாவட்டச் செயலாளர் மீது தவறு ஏதும் கண்டுகொள்ளப்படாதபோதும் அவரது சுய விவரக் கோவையை ஓய்வூதிய திணைக்களத் திற்கு அனுப்பும் நடவடிக்கைக்கு மட்டும் தொடர்ந்தும் தடைபோடப்படுகின்றது.

அவருக்கு எதிராகப் புதிதாக வேறு ஏதாவது குற்றச்சாட்டினை முன்வைத்து விடயத்தை மேலும் இழுத்தடிக்க முடியுமா என ஆராயப்படுகின்றதாக சக அதிகாரிகள் கவலை தெரிவித்தனர். இதனால் தொடர்ந்தும் யாழ்ப்பாணத்தில் பணியாற்ற அச்சமாகவுள்ளது எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

# ரவுடி ஒருவரின் துப்பாக்கிச் சூட்டில் இந்தியப் பொலிஸார் 8 பேர் சாவு!




இந்தியாவின் உத்தரப்பிரதேச மாநிலம் கான்பூரில் நபர் ஒருவரைக் கைது செய்ய முயன்றபோது அவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் எட்டுப் பொலிஸ் அதிகாரிகள் கொல்லப்பட்டனர்.

இன்று காலை நடந்த இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:-

குற்றப் பின்னணியை உடைய (ரவுடி) விகாஷ் துபே எனும் நபரைப் பொலிஸார் கைது செய்ய முயன்றுள்ளனர். 60 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்ட நிலையில், அது குறித்த வழக்குகளில் தேடப்பட்டு வரும் குற்றப்பின்னணியை உடைய குறித்த குற்றவாளியைக் கைது செய்வதற்காக அந்தப் பகுதிக்குச் சென்ற பொலிஸாரின் வாகனத்துக்குக் குறுக்கே ஜே.சி.பி இயந்திரத்தைக் நிறுத்தி தடுக்கப்பட்டது. கட்டடங்களின் மேற்பகுதியில் இருந்த நபர்கள் பொலி ஸாரைக் குறிவைத்துத் துப்பாக்கியால் சுட்டனர்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டில், துணைப் பொலிஸ் கண்காணிப்பாளர் தேவேந்திர மிஸ்ரா, உதவி ஆய்வாளர்கள் மூன்றுபேர், பொலிஸ் அதிகாரிகள் நான்குபேர் என 8பேர் கொல்லப்பட்டனர். காயமடைந்த பொலிஸார் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டனர்.

சம்பவ இடத்தில் பெரும் எண்ணிக்கை யிலான பொலிஸார் குவிக்கப்பட்டு அந்தக் கிராமத்தைச் சுற்றி வளைத்துச் சூடு நடத்தியவர்களைத் தேடி வருகின்றனர். விகாஸ் துபே உடன் தொடர்பில் இருந்த நூற்றுக்கும் மேற்பட்டோரின் தொலைபேசி அழைப்புகள் கண் காணிக்கப்பட்டு வருவதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# உயிரிழந்த தொழிலாளர்களுக்கு மத்திய அரசும் உதவ வேண்டும்

## தமிழக முதலமைச்சர் கோரிக்கை



இந்தியாவின் நெய்வேலி எல்.எல்.சி. அனல் மின் நிலைய விபத்தில் உயிரிழந்த 6 பேரின் குடும்பங்களுக்கு தமிழக அரசின் சார்பில் தலா 3 லட்சம் ரூபா (இந்திய மதிப்பில்) நிவாரண நிதி வழங்கப்படும் என்று அறிவித்த தமிழக முதலமைச்சர் பழனிச்சாமி, பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதியுதவி வழங்குமாறு தான் மத்திய அரசையும் கோரியுள்ளார் என்று தெரிவித்தார்.

இந்த விபத்தில் பலத்த காயமடைந்தவர்களுக்கு 1 லட்சமும், சாதாரண காயங்களுக்குள்ளானவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாவும் முதல்வர் நிவாரண நிதியில் இருந்து வழங்கப்படும் என்று அறிவித்த அவர், தன்னைத் தொடர்புகொண்டு இந்த விபத்துக் குறித்து விசாரித்த மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவிடம், மாநில அரசு சார்பாக செய்ய வேண்டிய உதவிகளை செய்து வருகிறோம் என்றும் இறந்தவர்களுக்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கும் மத்திய அரசு சார்பிலும் நிதியுதவி வழங்க வேண்டும் என்றும் கோரியுள்ளேன் கோரிக்கை வைத்துள்ளேன் என்று தெரிவித்தார்.

# வன்புணரப்பட்டு சிறுமி கொலை!

இந்தியாவின் புதுக்கோட்டை மாவட்டத்தில் ஏழு வயதுச் சிறுமி ஒருவர் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.


இது தொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். புதுக்கோட்டை மாவட்டத்தின் அறந்தாங்கிப் பகுதியில் உள்ள ஏம்பல் கிராமத்தில் இந்தச் சம்பவம் நடந்தது. ஏழு வயதுடைய ஜெயபிரியா என்கிற சிறுமியே இவ்வாறு சீரழிக்கப்பட்டுக் கொடூரமாகக் கொல்லப்பட்டார்.

கடந்த புதன்கிழமை மதியம் சிறுமி காணாமல் போயுள்ளார் என்று ஏம்பல் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளிக்கப்பட்டு அதன் பின்னர் நடந்த தேடலின் போதே கிளவிதம் ஊரணி என்கிற பகுதியில் புதர்களுக்கிடையில் சிறுமியின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

இது தொடர்பாக விசாரணையை முன்னெடுத்துவருகின்ற பொலிஸார், சிறுமியின் பக்கத்து வீட்டுக்காரரான 29 வயதுடைய ராஜா என்பவரைக் கைதுசெய்தனர். சிறுமி அந்தப் பகுதி வழியே சென்லும் போது அவரைத் தூக்கிச்சென்று வன்புணர்வுக்கு உள்ளாக்கியதாகவும் சிறுமி கத்திக் கூச்சலிட்டதால் சிறுமியை அடித்துக் கொன்றதாகவும் அவர் மீது பொலிஸார் குற்றம் சுமத்தியுள்ளனர்.

புதுக்கோட்டையில் அடுத்தடுத்து இத்தகைய சம்பவங்கள் நடந்தேறி வருவதால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டுத்தியுள்ளது. சில வாரங்களுக்கு முன்பு புதுக்கோட்டை மாவட்டத்தில் சிறுமி ஒருவர் கொலைசெய்யப் பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இரண்டாவது தடுப்பூசியும் தயார்! இந்தியா அடுத்தடுத்து அனுமதி




இந்தியாவின் அகமதாபாத்தைச் சேர்ந்த மருந்து தயாரிப்பு நிறுவனம் ஒன்று கண்டுபிடித்துள்ள கொரோனாத் தடுப்பூசியை மனிதர்களுக்குச் செலுத்திப் பரிசோதனை செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் புனேயைச் சேர்ந்த பாரத் பயோடெக் என்கிற நிறுவனம் கண்டுபிடித்த தடுப்பூசிக்கு இந்திய மருந்துக் கட்டுப்பாட்டுத் தலைமையகம் அனுமதி அளித்து அந்தத் தடுப்பூசியை மனிதர்களுக்குச் செலுத்திப் பரிசோதனை செய்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டது.

இந்த நிலையிலேயே அகமதாபாத்தில் உள்ள 'ஸைடஸ் காடிலா' என்ற மற்றொரு இந்திய நிறுவனத்துக்கும் கொரோனாத் தடுப்பூசியை மனிதர்களுக்குச் செலுத்திப் பரிசோதிப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இந்த மருந்தை மனிதர்களுக்குச் செலுத்தி இரண்டு கட்டங்களாகப் பரிசோதனை செய்யுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# எல்லையில் மோடி ஆய்வு!



இந்தியா - சீனா இராணுவத்தினர் இடையே எல்லையில் ஏற்பட்ட கைகலப்பில் 20 இந்திச் சிப்பாய்கள் இறந்தனர்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து இந்தியா - சீனா எல்லையில் போர்ப் பதற்றம் உருவானது. பதற்றத்தை தணிப்பதற்கு இருதரப்பிலும் பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதேநேரம் இரண்டு நாடுகளும் அங்கு படைகளைக் குவித்து வருகின்றன. இந்த நிலையில் லடாக்கில் உள்ள லே பகுதிக்கு இன்று திடீரென இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பயணம் மேற்கொண்டார்.

பயணம் மேற்கொண்ட அவர் அங்குள்ள நிலைமை மற்றும் பாதுகாப்பு நிலவரங்களை ஆய்வு செய்தார் என்று கூறப்படுகிறது. அத்தோடு அவருடன் முப்படைகளின் தளபதி பிபின் ராவத்தும் சென்றிருந்தார் என்று இந்திய ஊடகங்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

# பாலத்தில் கூடி விருந்துண்டு கொண்டாடிய செக் மக்கள்!





கொரோனா வைரசுக்குப் பிரியாவிடை கொடுப்பதைக் குறிக்கும் வகையில் செக் குடியரசில் சார்லஸ் பாலத்தில் பெரியதொரு விருந்துபசார நிகழ்ச்சி நடந்தது.

செக் குடியரசில் கொரோனா பரவலைத் தடுப்பதற்காக நடைமுறைப்படுத்தப்பட்ட ஊரடங்குக் கட்டுப்பாடுகளில் கடந்த மாதம் பல்வேறு தளர்வுகள் அறிவிக்கப்பட்டன. கடந்த வாரம் அவை மேலும் தளர்த்தப்பட்டு, பொது நிகழ்ச்சிகளில் ஆயிரம் நபர்கள் வரை பங்கேற்கலாம் என அனுமதியளிக்கப்பட்டது. அத்தோடு புதிய கொரோனாத் தொற்றாளர்களும் குறைவடைந்தனர்.

இதனால் உற்சாகமடைந்த மக்கள் கொரோனாவுக்குப் பிரியாவிடை கொடுப்பதைக் குறிக்கும் வகையில், செக் குடியரசின் தலைநகர் பிராக்கில் உள்ள சார்லஸ் பாலத்தில் விருந்துபசார நிகழ்ச்சி ஒன்றை நடத்தினர். பாலத்தில் கூடிய மக்கள் அங்கு அமர்ந்திருந்து விருந்துண்டு களித்தனர். செக்குடியரசு நாட்டில் 12 ஆயிரத்து 116 பேருக்குக் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், 353 பேர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சீனா போர்ப் பயிற்சி பென்டகன் கண்டனம்




தென்சீனக் கடற்பரப்பில் சீன போர்ப் பயிற்சி மேற்கொண்டு வருகிறது. சீனாவின் இந்த நடவடிக்கைக்கு அமெரிக்காவின் இராணுவத் தலைமையகமான பென்டகன் எதிர்ப்புத் தெரிவித்தது.

தென்சீனக் கடற்பரப்பில் அமைந்துள்ள பரசல் தீவுகள், அவற்றைச் சுற்றியுள்ள பகுதிகளில் கடந்த 1 ஆம் திகதி முதல் சீனா போர் பயிற்சியில் ஈடுபட்டு வருகிறது என்றும் போர்க் கப்பல்களுடன் நடைபெற்று வரும் இந்தப் பயிற்சி எதிர்வரும் 5 ஆம் திகதி வரை நடைபெறும் என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

பரசல் தீவுகள் பகுதிகளில் சீனா போர் பயிற்சியை மேற்கொள்வது பெரும் அச்சுறுத்தலாக விளங்குவதாக பிலிப்பைன்ஸ், தாய்வான் ஆகிய நாடுகள் தெரிவித்தன.

இந்த நிலையில், தென்சீனக் கடற்பரப்பின் சர்ச்சைக்குரிய பகுதியில் சீனா போர்ப் பயிற்சியில் ஈடுபடுவது கண்டிக்கத்தக்கது என அமெரிக்காவின் இராணுவத் தலைமையகமான பென்டகன் தெரிவித்துள்ளது.

தென்சீனக் கடல் விவகாரத்தில் அமெரிக்கா – சீனா இடையே மோதல் போக்கு நிலவி வரும் நிலையில் அமெரிக்க இராணுவம் தரப்பில் விடுக்கப்பட்டுள்ள இந்த அறிக்கை இரண்டு நாடுகளுக்கும் இடையேயான பதற்றத்தை மேலும் அதிகரித்துள்ளது.

## கொரோனா தடுக்கப்பட்டுவிட்டது கிம் ஜோங் உன் தெரிவிப்பு

கொரோனா வைரஸை எமது நாட்டுக்குள் ஊடுருவாமல் தடுத்துவிட்டோம் என்று வடகொரியாவின் தலைவர் கிம் ஜோங் உன் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸால் உலக நாடுகள் விழிபிதுங்கி நிற்கும் நிலையில், தங்கள் நாட்டில் கொரோனாவைக் கட்டுப்படுத்திவிட்டதாக வட கொரியா அரசு தெரிவித்தது. இந்த நிலையில், வட கொரியாத் தலைவர் கிம் ஜோங் உன், ஆளும் தொழிலாளர் கட்சியின் பொலிட்பீரோ கூட்டத்தில் பேசியபோது, கொரோனா வைரஸ், நாட்டுக்குள் நுழைவதைத் தடுத்து நிறுத்திவிட்டதாகத் தெரிவித்துள்ளார்.

கிம் ஜோங் உன் பேசியது தொடர்பாக வடகொரிய அரச செய்தி நிறுவனமான கே.சி.என்.ஏ வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

உலகளாவிய சுகாதார நெருக்கடி இருந்தபோதிலும், வீரியம் மிக்க வைரஸின் ஊடுருவலை நாங்கள் முற்றிலுமாகத் தடுத்துள்ளோம். தொற்றுநோய்க்கு எதிரான ஒரு நிலையான சூழ்நிலையைப் பராமரித்துள்ளோம், இது ஒரு பிரகாசமான வெற்றியாகும். அதேசமயம் தொற்றுநோய்க்கு எதிரான முயற்சியில் சுய - மனநிறைவு அடைந்துவிட்டதாகக் கருதக் கூடாது. இன்னும் அதிகபட்ச எச்சரிக்கையுடன் மக்கள் இருக்க வேண்டும் என்று கிம் தெரிவித்தார் என்றுள்ளது.



## வானில் இருந்து கொட்டப்படும் பொய் உடல்களால் பரபரப்பு



மெக்சிக்கோவில் இறந்தவர்களின் உடல்கள் உலங்குவானூர்தியில் இருந்து கடலில் வீசப்படுவதாகச் சமூக வலைதளங்களில் காணொலி ஒன்று பரவி வருகிறது. 20 நொடிகள் வரையிருக்கும் அந்தக் காணொலியில் உலங்குவானூர்தியிலிருந்து ஒவ்வொரு சடலங்களாகக் கீழே விழுவது போன்று காட்சிகள் இடம்பெற்றுள்ளன.

இந்தக் காணொலிக் காட்சியில் மெக்சிக்கோ இப்படித்தான் இறந்தவர்களின் உடல்களை அப்புறப்படுத்துகிறது என்பது போன்ற தலைப்புகள் பயன்படுத்தப்படுகின்றன. அந்தக் காணொலியை ஆய்வு செய்ததில், அது 2018 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் வலைத்தளம் ஒன்றில் பதிவேற்றம் செய்யப்பட்டது எனத் தெரியவந்துள்ளது. மேலும் அதில் இருப்பது எம் 26 ஹாலோ உலங்கு வானூர்தி என்றும் அதிலிருந்து வானில் குதித்து மிதப்பவர்கள் வான்வெளி சாகசம் செய்யும் வீரர்கள் என்றும் தெரியவந்துள்ளது.

## காருக்குள் தகாத உறவு ஐ.நா ஊழியர்கள் பணி நீக்கம்

இஸ்ரேலில் ஐக்கிய நாடுகள் சபையின் அலு வலகப் பணிகளுக்காக அமர்த்தப்பட்ட மகிழுந்தில் பெண் ஒருவருடன் ஐ.நா ஊழியர் ஒருவர் உடலுறவில் ஈடுபட்ட விவகாரம் தொடர்பில் ஐ.நாவின் இரண்டு ஊழியர்கள் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டனர். சம்பவத்தின்போது குறித்த மகிழுந்துக்குள் இவர்கள் இருவரும் இருந்தனர் என்றும் இதனால் ஊதியம் இல்லாத கட்டாய விடுப்பு அவர்களுக்கு வழங்கப்பட்டது என்றும் ஐ.நா சார்பில் தெரிவிக்கப்பட்டது.

**பின்னணி**

இஸ்ரேலின் தலைநகர் டெல் அவிவில் கடந்த மாதம் நடந்த நிகழ்வு ஒன்றைக் குறிக்கும் காணொலி ஒன்று சமூக ஊடகங்களில் பரவியது. ’யு.என்’ என ஆங்கிலத்தில் ஐ.நாவின் எழுத்துப் பொறிக்கப்பட்ட ஒரு வாகனத்துக்குள் இரண்டுபேர் உடலுறவு கொள்வதை அந்தக் காணொலி சித்திரித்தது. அந்த இருவரும் ஐ.நா படைகள் கண்காணிப்பு அமைப்பின் ஊழியர்கள் என்பது தெரியவந்தது.

இது தொடர்பான விசாரணைகளை ஐ.நா. முன் னெடுத்தது. இந்தச் தொடர்பான விசாரணை முடியும் வரை அவர்கள் பணியில் அமர்த்தப்படமாட்டார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 2019ஆம் ஆண்டு மட்டும் ஐ.நா ஊழியர்களுக்கு எதிராக 175 பாலியல் முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## எச்1 பி விசாத் தடையை ஒழிப்பேன்!

### ஜோ பிடன் வாக்குறுதி

எதிர்வரம் தேர்தலில் வெற்றி பெற்று நான் அமெரிக்காவின் அதிபரானால் எச்.1 பி நுழைவிசைவுக்கு விதிக்கப்பட்ட தடையை இல்லாமல் செய்வேன் என்று எதிர்வரும் தேர்தலில் ஜனநாயகக் கட்சி சாரர்பில் போட்டியிடவுள்ள ஜோ பிடன் தெரிவித்துள்ளார்.

எச்.1 பி நுழைவிசைவை அவர் (டிரம்ப்) நீக்கம் செய்துள்ளார். ஆனால், எனது நிர்வாகத்தில் அது இருக்காது என்று ஜோ பிடன் இதுகுறித்து மேலும் தெரிவித்தார்.

அமெரிக்காவில் குடியுரிமை பெறாமல், அங்கு தங்கி இருந்து வேலை செய்வதற்குப் பிற நாட்டினருக்கு எச் - 1 பி நுழைவிசைவு வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# குற்றச் செயல்களைத் தடுக்க முடியாமல் போனால் சீருடை அணிய அதிகாரிகள் வெட்கப்பட வேண்டும்

## பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் கமால் குணரட்ண டி.ஐ.ஜிக்கள் உள்ளிட்ட பொலிஸ் அதிகாரிகள் மத்தியில் உரை

கொழும்பு,ஜுலை04

அழுத்தங்களுக்கு அடிபணியாது தமது சீருடையின் கௌரவத்தை பாதுகாக்கும் வகையில் பொலிஸார் செயற்படுவது முக்கியம் என பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் கமால் குணரட்ண தெரிவித்துள்ளார்.

தமது பிரதேசங்களில் நடைபெறும் குற்றச் செயல்களுக்கு அந்தந்த மாகாணத்திற்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் உள்ளிட்ட உயர் பொலிஸ் அதிகாரிகளே பொறுப்புக் கூறவேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டிலுள்ள அனைத்து மாகாணங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் உள்ளிட்ட பொலிஸ்துறை உயர் அதிகாரிகள் மத்தியில் பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலின் போதே பாதுகாப்புச் செயலாளர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்துள்ள



அவர் –

போதைப்பொருள் மற்றும் பல்வேறு சட்டவிரோத குற்றச் செயல்கள் பாரியளவில் இடம்பெறும் நிலையில் அதற்கு அந்தந்த மாகாணத்திற்கு பொறுப்பான உயர் பொலிஸ் அதிகாரிகள் தான் பொறுப்புக் கூறவேண்டும்.

குற்றச் செயல்களை தடுக்க முடியாமற்போனால் அதிகாரிகள் தாம் சீருடை அணிவதற்கும் வெட்கப்பட வேண்டும்.

எந்தவொரு அழுத்தங்களுக்கும் அடிபணியாது தமது சீருடையின் கௌரவத்தை பாதுகாக்கும் வகையில் செயற்படுவது முக்கியமாகும்.

சட்டவிரோதச் செயற்பாடுகள் இடம்பெறுவதற்கு இடமளிக்க வேண்டாம். அவ்வாறான தவறுகளுக்கான பொறுப்புக் கூறலிலிருந்து அந்தந்த மாகாணங்களின் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர்கள், பிரதிப் பொலிஸ் மாஅதிபர் மற்றும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் வரையான சகலரும் சுலபமாக நழுவி விட முடியாது.

மாறாக இம்மாகாணங்களில் குற்றச்செயல்கள் அதிகரிப்பதற்கான பொறுப்பை அவர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

தமது கடமைகளை ஏனைய தொழில்கள் போல கணக்கெடுக்காமல் நாட்டில் வாழும் மக்களின் வாழ்க்கை உங்களின் கரங்களிலேயே தங்கியுள்ளது என்பதைக் கருத்திற்கொண்டு செயற்படுவது அவசியம் என குறிப்பிட்டுள்ளார்.

# மஹேலவிடம் இன்று விசாரணை இல்லை

2011ஆம் ஆண்டு உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் ஆட்ட நிர்ணயச் சதி இடம்பெற்றதாக எழுப்பப்பட்ட குற்றச்சாட்டுத் தொடர்பில் வாக்குமூலமளிக்க முன்னாள் அணித் தலைவர் மஹேல ஜெயவர்த்தனவிடம் இன்று வருகை தந்த போதும் அவரிடம் வாக்குமூலம் பதியப் படவில்லை.

அவரிடம் இன்று வாக்குமூலம் பெறப்படாது என்று அவருக்கு நேற்றிரவே அறிவிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் விளையாட்டுத்துறை அமைச்சில் உள்ள சிறப்பு விசாரணைப் பிரிவிற்கு இன்று காலைவருகைதந்த மஹேல, விசாரணை நடத்தப்படுவதை ஒத்திவைக்கும்படிதான் கோரினார் என்று இன்று ஊடகங்கள் சிலவற்றில் வெளியாகி இருக்கும் செய்தி தவறு என்பதை வெளிப்படுத்துவதற்காகவே தான் வருகை தந்தார் என்று தெரிவித்தார்.

விளையாட்டுத்துறை அமைச்சின் முன்பாகச் செய்தியாளர்களைச் சந்தித்த மகேல தெரிவித்ததாவது:

நேற்றிரவு 11.30 மணியளவில் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வரத்தேவையில்லை என எனக்கு அறிவிக்கப்பட்டது.

ஆனால், தனிப்பட்ட காரணங்களுக்காக விசாரணைப் பிரிவில் நான் முன்னிலைக முடியாது என அறிவித்துள்ளேன் என்று இன்று காலை சில ஊடகங்களில் தவறான செய்திகள் வெளியாகின.

இதனாலேயே நான் இன்று காலை விசாரணைப் பிரிவுக்கு வருகை தந்தேன். அதிகாரிகளுக்கு அறிவித்துவிட்டே இவ்விடத்திற்கு வந்தேன்.

நான் பொறுப்புடையன் என்ற வகையில் அவர்களுக்கு தேவையானவற்றைப் பெற்றுக்கொடுக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

விசாரணையை ஒத்தி வைக்கும் தீர்மானத்தை அதிகாரிகளே எடுத்தனர். ஊடகங்களில் வெளியான செய்தி உண்மைக்கு புறம்பானது – என்றார்.

மஹேலவிடம்விசாரணைநடத்துவதற்கான மற்றொரு தினம் அறிவிக்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தான் தெரிவிக்காதவற்றை பிழையான முறையில் வெளியிட வேண்டாம் என ஊடகங்களிடம் கேட்டுக்கொண்டார் மகேல.

கிரிக்கட் விளையாட்டை எதிர்காலத்திலும் சிறப்பாக நகர்த்திச் செல்வதற்கான பொறுப்பு எனக்கிருக்கின்றது. விசாரணைகளை முன்னெடுக்கும் தரப்பினருக்கு இயலுமானவரையில் நான் எனது ஒத்துழைப்பை வழங்கக் காத்திருக்கின்றேன். பொறுத்திருந்து பார்க்கலாம். எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்று. நான் கிரிக்கெட் விளையாட்டை மிகவும் நேசிப்பவன் என்று அவர் மேலும் தெரிவித்தார்

இந்த உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டத்தில் இலங்கை மற்றும் இந்திய அணிகள் மோதின. இலங்கை அணி 6 இலக்குகள் வித்தியாசத்தில் தோற்றது

இந்தத் தோல்விக்கு மைதானத்திற்கு வெளியே நடந்த சூதாட்டமே காரணம் என்று முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமக அண்மையில் குற்றஞ்சாட்டியிருந்தார். ஆதாரங்கள் எதனையும் முன்வைக்காது ஊகத்தின் அடிப்படையில் அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்திருந்தார்.

அவரது குற்றச்சாட்டுத் தொடர்பில் விளையாட்டு அமைச்சு நியமித்த சிறப்பு விசாரணைக் குழு தனது விசாரணைகளைத் தொடங்கியுள்ளது. 2011 உலகக் கிண்ண இலங்கை அணித் தேர்வாளர் குழுத் தலைவரான அரவிந்த டி சில்வா விடம் 6 மணி நேரமும் அணியின் தொடக்க வீரரான உபுல் தரங்கவிடம் 2 மணி நேரமும் அப்போதைய அணித் தலைவர் குமார் சங்ககாரவிடம் 9 மணி நேரமும் ஏற்கனவே வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

# யாழ் மாவட்டத்தில் கடந்த 6 மாதங்களில் நுகர்வோர் விவகாரத்தில் 373 வழக்குகள்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஜுலை03

யாழ் மாவட்டத்தில் கடந்த ஆறு மாதங்களில் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் சட்டத்தை மீறிய 373 வழக்குகள் பதியப்பட்டுள்ளன பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் யாழ் மாவட்ட இணைப்பதிகாரியும் வடமாகாண பதில் உதவிப்பணிப்பாளருமாகிய அப்துல் லத்தீப் ஜஃபர் ஸாதிக் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் மேலும் விபரம் தெரிவிக்கையில் –

இந்த வழக்குகள் காலாவதி, விலைப் பட்டியலின்மை, உத்தரவாதம் இன்மை, இறக்குமதி விபரமின்மை, ஏடுடுளு தரச் சான்றுதல் இன்மை, கட்டுப்பாட்டு விலையினை மீறியமை, பொறிக்கப்பட்ட விலையினை விட அதிக விலைக்கு விற்பனை செய்தமை போன்ற காரணங்களுக்காகவே பதியப்பட்டன.

இந்த அரையாண்டு காலப்பகுதியில் யாழ் மாவட்ட எல்லைக்குட்பட்ட நீதிவான் நீதிமன்றங்களில் ஜனவரி மாதம் 115 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 102 வழக்குகளுக்கு ரூபா 4 லட்சத்து 97 ஆயிரம் ரூபா தண்டப்பணமாக விதிக்கப்பட்டது பெப்ரவரி மாதம் 78 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 69 வழக்குகளுக்கு தண்டப்பணமாக 3 லட்சத்து 57 ஆயிரம் ரூபா விதிக்கப்பட்டது.

மார்ச் மாதம் 42 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு தண்டப்பணமாக ஒரு லட்சத்து 64 ஆயிரத்து 500 ரூபா விதிக்கப்பெற்றது. ஏப்ரல், மே மாதங்களில் கோவிட் 19 காரணமாக வழக்குகள் பதிவு செய்யப்படவில்லை. ஜுன் மாதம் 92 வழக்குகள் பதிவு செய்யப்பட்ட நிலையில் 84 வழக்குகளிற்கு 4 லட்சத்து 18 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

இவற்றின் அடிப்படையில் அரையாண்டு காலப்பகுதியில் 318 வழக்குகள் பதிவுசெய்யப்பட்டு 307 வழக்குகள் நிறைவு பெற்று தண்டப்பணமாக 14 லட்சத்து 36 ஆயிரத்து 500 ரூபா கிடைக்கப்பெற்றது என்றார்.

# 2011 உலகக் கிண்ணக் கிரிக்கெட் விசாரணை நாட்டுக்கு அவமானம்



## நாமல் கடும் சீற்றம்

கொழும்பு, ஜுலை 03

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி.) எந்தவொரு ஆரம்பகட்ட விசாரணையும் இன்றி இலங்கை கிரிக்கெட் அணி வீரர்களை நேரடியாகப் பொலிஸ் விசாரணைக்கு அழைப்பது நாட்டுக்குத் தேவையற்ற அவமானத்தை ஏற்படுத்தும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

2011ஆம் ஆண்டு உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் ஆட்ட நிர்ணய சதி இடம் பெற்றுள்ளது எனச் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு தொடர்பில் இலங்கை அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்கக்கார விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளமை குறித்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக் கும்போதே அவர் மேற் கண்டவாறு கூறியுள்ளார்.

# சு.கவை கைப்பற்றும் தேவை பெரமுனவுக்குக் கிடையாது!

## சாகர காரியவசம் கூறுகின்றார்



கொழும்பு, ஜுலை 04

ஸ்ரீலங்காபொதுஜனபெரமுனவுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை கைப்பற்றும் தேவையில்லை எனப் பொது ஜன பெரமுனவின் பொதுச்செயலாளரான சட்டத்தரணி சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

புதிய கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வெற்றிகரமான ஆரம்பத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது.

எதிர்காலத்தில் இந்தக் கட்சியை மேலும் வலுப்படுத்தி முன்னெடுத்துச் செல்வது அதன் தலைவர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் பஸில் ராஜபக்ஷ ஆகியோரின் நோக்கம்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கீழ் மட்டத்தில் வெற்றிகரமான கட்டமைப்பை கொண்டுள்ள பிரதான அரசியல் கட்சி – என்றார்.

# இன்று கொழும்பு நீதிமன்றில் முன்னிலையானார் விஜயகலா

## நவம்பர் 27 வரை வழக்கு ஒத்திவைப்பு





கொழும்பு,ஜுலை03

தமிழீழ விடுதலைப்புலிகள் மீள உருவாக வேண்டும் என்று கருத்துத் தெரிவித்தார் எனக் குறிப்பிட்டு அது தொடர்பில் முன்னாள் கல்வி ராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் மீது வழக்கு தொடரப்பட்டுள்ள வழக்கு இன்றைய தினம் கொழும்பு புதுக்கடை நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது. விஜயகலா மகேஸ்வரன் நீதிமன்றத்தில் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராஜாவுடன் முன்னிலையானார்.

வழக்கைக் கவனத்தில் எடுத்த நீதிவான் எதிர்வரும் நவம்பர் 27 ஆம் திகதி வரை அதை ஒத்திவைத்தார்

2018 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் சுழிபுரம் பகுதியில் சிறுமி ஒருவர் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டசம்பவத்தைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் அப்போது ராஜாங்க அமைச்சராக இருந்த விஜயகலா மகேஸ்வரன தமிழீழ விடுதலைப் புலிகள் மீள உருவாக்கப்பட வேண்டுமென உரையாற்றியமை தொடர்பில் விஜயகலா மகேஸ்வரன் கைதுசெய்யப்படவேண்டுமென தென்னிலங்கையில் பெரும் சர்ச்சை உருவாகியது. அப்போது வகித்த அமைச்சுப் பதவியை அவர் ராஜினாமா செய்தார். அதன் பின்னர் ஒருங்கிணைக்கப்பட்ட குற்றத்தடுப்பு பிரிவினரால் அவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் அவருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டது. அந்த வழக்கே இன்று நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

# போராட்டங்களையும் உயிர்த்தியாகங்களையும் வாக்குச் சேகரிப்புக்குப் பயன்படுத்த வேண்டாம்

## தமிழ் அரசியல்வாதிகளிடம் இன்பராசா வேண்டுகோள்



எமதுபோராட்டங்களையும்,உயிர்த்தியாகங்களையும் தமது வாக்குச் சேகரிப்புக்குப் பயன்படுத்த வேண்டாம் என்று புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் க.இன்பராசா, தமிழ் அரசியல்வாதிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

எத்தனையோ பலதரப்பட்ட ஆயுதக் குழுக்கள், தமிழ் மக்கள் மத்தியிலே தோன்றினாலும், அவை ஆயுதம் ஏந்தியதன் இலக்கை நோக்கிப் பயணிக்கத் தவறின அல்லது மாறி மாறி பதவிக்கு வந்த அரசுகளால் திசை திருப்பப்பட்டன. ஆனால், விடுதலைப் புலிகளாகிய நாம் இறுதிவரைப் போராடினோம். அரசு, சர்வதேச நாடுகள் பலவற்றுடன் சேர்ந்த மேற்கொண்ட சதியால் எமது ஆயுதங்கள் மொளினிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

இலங்கையில் தமிழ் இனம் என ஓர் இனம் உண்டு எனவும், அந்த இனத்துக்குப் பிரச்சினைகள் உள்ளன எனவும் சர்வதேச மட்டத்தில் விவகாரமாக உருவெடுப்பதற்குக் காரணம் எமது மாபெரும் போராட்டமும் உயிர்த் தியாகமுமேயாகும்.

அவ்வாறிருக்க, எமது உரிமையைக் கொண்டாடுவதற்கு எந்தவொரு தமிழ் அரசியல்வாதிகளுக்கும் உரிமை கிடையாது. அவர்கள் வேண்டுமானால் அப்பாவி மக்களுக்குப் பொய் வாக்குறுதிகளை வழங்கி, மக்கள் போடும் வாக்குப் பிச்சையில் வாழ்க்கையைக் கொண்டு செல்லட்டும்.

ஆனால், எமது போராட்டங்களையும், உயிர்த்தியாகங்களையும் நமது வாக்குச் சேகரிப்புக்குப் பயன்படுத்த வேண்டாம். கடந்த காலங்களில் தங்கள் பதவிகளால் ஏதேனும் சேவைகள் ஆற்றப்பட்டிருந்தால், அதனைச் சொல்லி வாக்குக் கேளுங்கள் – என்றுள்ளது.

# 98 ஆவது அனைத்துலக கூட்டுறவு தினம் நாளை

இந்த ஆண்டுக்கான அனைத்துலகமும் கொண்டாடும் 98 ஆவது அனைத்துலக கூட்டுறவு தினம் நாளை சனிக்கிழமையாகும். இத்தினத்தை மாவட்டத்தின் கூட்டுறவாளர்களும் பணியார்களும் கொண்டாடி மகிழ்கின்றனர்.

கொவிட் –19 தொற்றுக் காரணமாக கடந்த காலங்களைப் போன்று பாரிய அளவில் இந்நிகழ்வை நடத்த முடியாத நிலை காணப்படுகின்றது.

எனினும் நாளைய தினம் காலை 9.00 மணிக்கு கூட்டுறவுச் சங்கங்கள் அவற்றின் தலைவர், பணிப்பாளர், பணியாளர் மற்றும் கூட்டுறவாளர்கள் என இணைந்து சங்க மட்டத்தில் கூட்டுறவுக் கொடியை ஏற்றி வைத்து கூட்டுறவுக்கீதம் இசைத்து 98 ஆவது அனைத்துலக கூட்டுறவு தினத்தை நினைவு கூருவர். இந்நிகழ்வானது கூட்டுறவாளர்கள் மற்றும் பணியாளர்கள் மத்தியில் புத்துணர்வை ஏற்படுத்தும் எனக் கூறப்பட்டது.

98 ஆவது சர்வதேச கூட்டுறவு தினவிழாவின் கருப்பொருளாக Cooperatives for Climate Action அதாவது காலநிலை பாதிப்புக்களுக்கு எதிராக கூட்டுறவுத்துறை செயலாற்ற வேண்டும் என்னும் நோக்கத்தோடு உலகம் முழுவதும் இத்தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

# மட்டக்களப்பில் கூட்டமைப்பு 4 ஆசனங்களை வெல்லும்!

## கூறுகின்றார் ஸ்ரீநேசன்



மட்டக்களப்பு, ஜுலை 03

மட்டக்களப்பு மாவட்டத்தில் இம்முறை நான்கு ஆசனங்களை தமிழ் தேசியக் கூட்டமைப்பு பெற்றுக் கொள்ளும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீநேசன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு – இருதயபுரம் பிரதேசத்தில் நேற்று மாலை இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் வைத்து கருத்து தெரிவித்தபோதே அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

இம்முறை இடம்பெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் மக்களின் வாக்குகளை கபளீகரம் செய்வதற்காக பல தேசியக் கட்சிகளும், அவர்களின் முகவர்களாக சுயேட்சைக் குழுக்களும் இறங்கி உள்ளன.

இவர்களின் நோக்கம் இத் தேர்தலில் வெற்றி பெறுவதோ அல்லது ஆசனங்களை பெற்றுக்கொள்வதோ அல்ல. வெறுமனே தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வாக்குகளை சிதறடிப்பதே ஆகும்.

இவர்களுக்கு ஒவ்வொரு தேர்தலிலும் எமது மக்கள் நல்ல பாடம் கற்றுக்கொடுத்தே வருகிறார்கள். மட்டக்களப்பு மாவட்டத்தில் இம்முறை நான்கு ஆசனங்களை தமிழ் தேசியக் கூட்டமைப்பு பெற்றுக் கொள்ளும்.

அதற்குரிய மக்கள் ஆணையும், வல்லமையும் எமக்கு உள்ளது. இந்த ஆசன எண்ணிக்கையை குறைத்து வேறு ஒரு சமூகத்தின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க பல முகவர்கள் இறங்கியுள்ளார்கள்.

அவர்களால் ஒரு ஆசனத்தைக் கூட பெற்றுக் கொள்ள முடியாது. அத்துடன் சிங்கள மக்கள், தமிழ் கட்சிகளுக்கோ முஸ்லிம் கட்சிகளுக்கோ வாக்களிப்பதில்லை.

அதுபோல முஸ்லிம் மக்களும் சிங்கள கட்சிகளுக்கோ, தமிழ் கட்சிகளுக்கோ வாக்களிப்பது இல்லை. இதை உணர்ந்து தமிழ் மக்களும் தமிழ் கட்சிகளுக்கு மாத்திரமே வாக்களிக்க வேண்டும் – என்றார்.

இந்த கூட்டத்தில் மட்டக்களப்பு மாநகர முதல்வர் தி.சரவணபவன், மண்முனை பிரதேசசபையின் தவிசாளர் சண்முகராசா மற்றும் மாநகரசபை உறுப்பினர்கள், கட்சி ஆதரவாளர்கள் எனப் பலரும்கலந்து கொண்டிருந்தனர்.

# பொதுஜன பெரமுனவின் மேடையில் நாமல் குமார

பல நபர்களுடன் மேற்கொள்ளப்பட்ட தொலைபேசி உரையாடல்கள் அடங்கிய குரல் பதிவுகளை வெளியிட்டு, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை கொலை செய்யும் சதித்திட்டம் இருப்பதாக தகவல் வெளியிட்டதன் காரணமாக பிரபலமான நாமல் குமார, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேர்தல் பிரசாரத்தில் இணைந்துக்கொண்டுள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவருக்கு ஆதரவாக நடைபெற்ற பிரசாரக் கூட்டம் ஒன்றில் அவர் உரையாற்றியுள்ளார்.

தனக்கு எதிராக தொடரப்பட்டிருந்த வழக்கில் இருந்து தான் விடுதலை செய்யப்பட்டுள்ளார் எனவும் தனக்கு நேர்ந்த அவமதிப்புக்காக மனித உரிமை வழக்கொன்றைத் தான் தாக்கல் செய்துள்ளார் எனவும் நாமல் குமார, அந்த கூட்டத்தில் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேன மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளரும் தற்போதைய ஜனாதிபதியுமான கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரை கொலை செய்யும் சதித்திட்டம் இருப்பதாகவும் பயங்கரவாத விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி நாலக டி சில்வாவுக்கு இதில் தொடர்பு இருப்பதாகவும் கூறி நாமல் குமார கடந்த நல்லாட்சி அரசின் காலத்தில் பெரும் பரப்பரப்பை ஏற்படுத்தியிருந்தார்.

இந்த விடயம் அப்போது பரப்பரப்பாக பேசப்பட்ட போதிலும் தற்போது அது தொடர்பான விசாரணைகள் உட்பட எந்த தகவல்களும் வெளியிடப்படுவதில்லை.

# மனித உரிமை ஆர்வலர்களை குறிவைப்பதை விடுத்து மனித உரிமையை மதிக்க இலங்கை முன்வரவேண்டும்

## சூக்கா அம்மையாரின் விடயத்தை ஒட்டி சர்வதேசத் தரப்புகள் ஒன்றாக அழுத்தம்

**'இலங்கை அரசாங்கத்தினால் ஜஸ்மின் சூக்காவிற்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் தொடர்பான பகிரங்க அறிக்கை' என்ற பெயரில் சர்வதேச ரீதியில் இயங்கும் நூற்றியைம்பதுக்கும் மேற்பட்ட அமைப்புக்களுடன் சர்வதேச ரீதியில் பெரிதும் மதிக்கப்படும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள், ஆர்வலர்கள், பிரமுகர்கள் ஒன்றிணைந்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர். அதன் விவரம் இங்கு பிரசுரமாகின்றது.**

இலங்கை அரசாங்கத்தினால் ஜஸ்மின் சூக்காவிற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களுக்கு எதிராக கீழே கையொப்பமிட்டுள்ள அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் தமது கடுமையான எதிர்ப்பினை வெளிப்படுத்த விரும்புகின்றன. சூக்காவிற்கு எதிரான இந்தக் குற்றச்சாட்டுக்களும் அச்சுறுத்தல்களும் மனித உரிமைகள் பாதுகாவலராகவும் உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட வழக்கறிஞராகவும் உள்ள சூக்காவினுடைய நீண்ட காலப் புகழை பாதிப்படையச் செய்வனவாக உள்ளன.

ஜஸ்மின் சூக்கா ஒரு முன்னணி மனித உரிமைகள் வழக்கறிஞர், செயற்பாட்டாளர். அத்துடன் இடைக்கால நீதி , பால் மற்றும் சர்வதேசக் குற்றவியல் சட்டம் ஆகியவற்றில் சர்வதேச நிபுணராகவும் உள்ளார். ஒரு வாழ்நாள் முழுவதுமான மனித உரிமைகள் மற்றும் நீதியின் பாதுகாப்பிற்காக உழைத்தமை அவருடைய நிபுணத்துவத்திற்கு காரணமாகும்.

தென் ஆபிரிக்காவில் நிறவெறி நிலவிய ஆண்டு காலப்பகுதியில் சூக்கா அவர்கள் தென்னாபிரிக்காவின் சமாதானம் மற்றும் நீதிக்காகப் பணியாற்றும் ஒரு மதச்சார்பான அமைப்பான சமயம் மற்றும் சமாதானம் பற்றிய உலக மகாநாட்டினுடைய உறுப்பினராக இருந்தார் (தென்னாபிரிக்க அத்தியாயம்), அத்துடன் அதன் தலைவராகப் பின்னர் இருந்தார். நாடுகடந்து வாழும் தென்னாபிரிக்கர்களுக்கான தேசிய நாடுகடத்தும் சபையின் ஒரு உறுப்பினராக இருந்தார்.

இந்த அமைப்பானது நாடு கடந்து வாழும் தென் ஆபிரிக்கர்களை சொந்த நாட்டுக்கு திருப்பி அனுப்புவதற்கு நிறவெறி அரசுடன் பேச்சு வார்த்தை நடாத்தியது.

1995 தொடக்கத்தில், சூக்கா அவர்கள் தென்னாபிரிக்க உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவில் மனித உரிமைகள் மீறல்கள் சபையின் பிரதித் தலைவராகப் பணியாற்றினார். 2002 இற்கும் 2004 இற்கும் இடையில் மனித உரிமைகள் உயர் ஆணையாளர் அலுவலகத்தினால் நியமிக்கப்பட்ட சியரலியோனுக்கான உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவிற்காக நியமிக்கப்பட்ட மூன்று சர்வதேச ஆணையாளர்களில் ஒருவராக இருந்தார்.

ஜூலை 2010 இல் இலங்கையின் இறுதிக்கட்டப் போரின் போது புரியப்பட்ட போர்க் குற்றங்களுக்கான பொறுப்புக்கூறல் பற்றி ஐ.நா. பொதுச் செயலாளருக்கு ஆலோசனை வழங்கும் மூன்று நிபுணர்களைக் கொண்ட குழுவில் ஜஸ்மின் சூக்கா நியமிக்கப்பட்டார். ஜூன் 2015 இல் சூக்கா அவர்கள் ஐ.நா. பொதுச் செயலாளரால் மூன்று உறுப்பினர்களை கொண்ட சுயாதீன மீளாய்வுக் குழுவிற்கு நியமிக்கப்பட்டார். இந்தக் குழுவானது மத்திய ஆபிரிக்க குடியரசில் வெளிநாட்டு இராணுவப் படைகளால் மேற்கொள்ளப்பட்ட பாலியல் துஷ்பிரயோகம் பற்றிய குற்றச்சாட்டுக்களை களையும் அந்தக் குற்றச்சாட்டுக்களுக்கான ஐ.நாவின் பதில் நடவடிக்கை பற்றியும் விசாரணை செய்தது.

2016 இல் ஐ.நாவின் மனித உரிமைகள் சபையின் தலைவரால் தென் சூடானில் மனித உரிமைகள் பற்றிய மூன்று பேரைக் கொண்ட ஆணைக்குழுவினை தலைமை தாங்குவதற்கு சூக்கா அவர்கள் தெரிவு செய்யப்பட்டார். இந்தப் பதவியில் அவர் தற்போதும் உள்ளார். இதனை விட சூக்கா அவர்கள் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்திட்டம் இலங்கை என்ற அமைப்பின் பணிப்பாளராக உள்ளார். சூக்கா அவர்கள் தென்னாபிரிக்காவிலுள்ள மனித உரிமைகளுக்கான அமைப்பின் முன்னாள் நிறைவேற்றுப் பணிப்பாளராகவும் உள்ளார். இந்த இலாப நோக்கமற்ற சுயாதீனமான அமைப்பானது 1996 இல் ஜனாதிபதி மண்டேலாவின் அரசினாலும் ஐரோப்பிய ஒன்றியத்தினாலும் உருவாக்காப்பட்டது. கடந்த காலங்களில் இடம்பெற்ற மீறல்களுக்கு தீர்வு காண்பதும் தென் ஆபிரிக்காவில் ஒரு மனித உரிமைகள் கலாச்சாரத்தை கட்டியெழுப்புவதுமே இந்த அமைப்பின் குறிக்கோள்களாகவும், நோக்கங்களாகவும் உள்ளன. இந்த அமைப்பானது சிவில் சமூகத்திற்கு நிதி உதவியும் வழங்குகின்றது.

ஜஸ்மின் சூக்கா அவர்கள் தென் ஆபிரிக்காவில் பாதிக்கப்பட்டவர்களுக்கான பரிகாரங்கள் மற்றும் குற்றவியல் பொறுப்புக்கூறல் பற்றிய பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டுவரும் தென்னாபிரிக்க உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் நிறைவு செய்யப்படாத பணிகளை அணுகித் தீர்ப்பதற்கான இந்த அமைப்பின் செயற்குழுவுக்கும் தலைமை தாங்குகின்றார்.

ஜஸ்மின் சூக்கா இடைக்கால நீதி, நல்லிணக்கம் மற்றும் இழப்பீடுகள் பற்றிய முதன்மையான உலகளாவிய அதிகாரிகளில் ஒருவாராவார் அத்துடன் இடைக்கால நீதி பற்றிய ஆபிரிக்க ஒன்றியத்தின் கொள்கை பற்றி எழுதியவர்களிலும் ஒருவராவார். மிக அண்மையில் இந்த வருடம் பெப்ரவரி இல் நடாத்தப்பட்ட இடைக்கால நீதி பற்றிய வரலாற்று ரீதியான திறந்த விவாதத்தில் இரண்டு சிவில் சமூக நிபுணர்களில் ஒருவராக உரையாற்றுமாறு பாதுகாப்பும் சபையினால் அவர் அழைப்பு விடுக்கப்பட்டார்.



மனித உரிமைகள் பாதுகாவலர்கள் பற்றிய ஐ.நாவின் பிரகடனம் எனவும் அறியப்பட்ட, உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரங்களை ஊக்குவிக்கும் மற்றும் பாதுகாக்கும் தனிநபர்கள், குழுக்கள் அல்லது சமூக அமைப்புகளினுடைய உரிமை மற்றும் பொறுப்பு பற்றிய பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை கொள்கைகள் பற்றி நாங்கள் கவனத்திற்கு கொண்டுவருகின்றோம். குறிப்பாக நாங்கள் அந்தப் பிரகடனத்தின் 1 மற்றும் 2 சரத்துக்களை குறிப்பிட விரும்புகின்றோம். அது தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில் மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரங்களை ஊக்குவிப்பதற்கும் மற்றும் அவற்றைப் பாதுகாப்பதற்கும் நடைமுறையாக்குவதற்கும் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு என்பதுடன் ஒவ்வொரு அரசிற்கும் அனைத்து மனித உரிமைகளையும் அடிப்படை சுதந்திரங்களையும் பாதுகாக்கும் ஊக்குவிக்கும் மற்றும் நடைமுறைப்படுத்தும் முக்கிய கடமையும் பொறுப்பும் உள்ளது என அந்தப் பிரகடனம் தெரிவிக்கின்றது.

சூக்காவிற்கு எதிராக இலங்கை அதிகாரிகளினால் தெரிவிக்கப்பட்டிருப்பவை சூக்காவிற்கும் அவருடைய அமைப்பிற்கும் மனித உரிமைகள் சமூகத்திற்கும் எதிரான தாக்குதல் மட்டுமல்லாமல் இது அவருடைய பணியுடன் தொடர்புபட்ட பாதிக்கப்பட்டவர்கள், மற்றும் உயிர்தப்பியவர்கள் மீதான தாக்குதலும் ஆகும். மனித உரிமைகளையும் இலங்கையில் பாதிக்கப்பட்டவர்களையும் பாதுகாக்கும் அவருடைய சட்ட ரீதியான செயற்பாடுகள் மேலும் குறிப்பாக உண்மை மற்றும் நீதிக்கு ஆதரவான அவரது செயற்பாடுகளுக்கு நேரடிப் பதிலடியாகவுள்ள சூக்காவிற்கு எதிரான தாக்குதல்கள் குறித்து நாங்கள் எமது ஆழ்ந்த கரிசனையைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

> சூக்காவிற்கு எதிராக இலங்கை அதிகாரிகளினால் தெரிவிக்கப்பட்டிருப்பவை சூக்காவிற்கும் அவருடைய அமைப்பிற்கும் மனித உரிமைகள் சமூகத்திற்கும் எதிரான தாக்குதல் மட்டுமல்லா மல் இது அவருடைய பணியுடன் தொடர்புபட்ட பாதிக்கப்பட்டவர்கள், மற்றும் உயிர்தப்பியவர்கள் மீதான தாக்குதலும் ஆகும்.

சூக்காவிற்கு எதிரான இலங்கை அரசாங்கத்தின் குற்றச்சாட்டுக்கள் இந்த அடிப்படை சர்வதேச உரிமைகளை மீறுவனவாக உள்ளமையுடன் நீண்ட காலமாக உள்ள அநீதி மற்றும் இலங்கையில் நிலவும் குற்றத்தில் இருந்து பாதுகாப்பு வழங்குதல் ஆகியவற்றில் இருந்து சர்வதேச சமூகத்தின் கவனத்தை திசைதிருப்புவதற்கான இலங்கை அரசாங்கத்தின் இன்னுமொரு முயற்சி இதுவாகும்.

கீழே கையொப்பமிட்டுள்ள அனைவரும், பொறுப்புக் கூறலுக்கும் மற்றும் மனித உரிமைகள் பற்றிய குறிக்கோள்களுக்காகவும் பாடுபடுபவர்களைத் தொடர்ச்சியாகப் பலவீனப்படுத்துவதை விட மனித உரிமைகளை மதிப்பதற்கு தனது தீவிரமான ஈடுபாட்டை வெளிக்காட்டுமாறு இலங்கை அரசாங்கத்திற்கு அழைப்பு விடுக்கின்றோம்.

# தமிழ்த் தேசியத்தை காப்பதற்கு சுமந்திரனைத் தோற்கடியுங்கள்

## மூத்த போராளி மனோகர் கோரிக்கை



யாழ்ப்பாணம், ஜூலை 03

தமிழ்த் தேசியத்தைத் தூக்கிலிடுவதற்கான முயற்சிகள் தீவிரமடைந்து வரும் இன்றைய சூழலில் ஒரு மாவீரரின் தந்தையான முத்துக்குமார் மனோகர் ஆகிய நான் சில விடயங்களை வெளிப்படுத்தியே ஆக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஆகிய முக்கிய கட்சிகளுடன் தமிழ்த் தேசிய பசுமை இயக்கமும் தேசியத்தை நேசிப்போரின் கவனத்தை ஈர்த்துள்ளது. இவற்றில் எந்த அணிக்கு வாக்களிப்பது என்பது அவரவர் சொந்த முடிவு. ஆனால், மாவீரர்களின் பெற்றோர்கள், எம்மை வழிநடத்திய தலைவர் பிரபாகரனை என்றும் நேசிக்கும் முன்னாள் போராளிகள், ஆதரவாளர்கள் அனைவரும் ஜனாதிபதி சட்டத்தரணி ஆபிரஹாம் மதியாபரணம் சுமந்திரனுக்கு வாக்களிப்பது எமது மாவீரர்களின் தியாகத்தைக் கணக்கிலெடுக்காத தோற்றத்தைக் கொடுத்து விடும் என்பதைப் பணிவுடன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

– இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார் மூத்த போராளியும் மாவீரர் ஒருவரின் தந்தையுமான மு. மனோகர் (காக்கா).

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

எமது தேசியத் தலைவரால் அடையாளப்படுத்தப்பட்ட கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சரியோ பிழையோ அதற்கு வாக்களிப்பது என்பது எமது கடமை எனக் கணிசமானோர் கருதுகின்றனர் எனத் தெரிகிறது. இவ்வாறான நிலைப்பாட்டில் உள்ளவர்களுக்கு மட்டுமே இந்த வேண்டுகோளை விடுக்கிறேன். மேலே சுட்டிக்காட்டியுள்ள ஏனைய மூன்று தரப்புக்களில் ஏதோ ஒன்றுக்கு வாக்களிக்கத் தீர்மானிப்போர் விருப்பு வாக்குகளை தாம் உத்தேசிக்கும் எவருக்கும் அளிக்கலாம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிக்கத் தீர்மானிப்போர் சுமந்திரனைத் தவிர வேறு மூன்று வேட்பாளர்கள் எவருக்காவது அளிக்குமாறு அன்புரிமையுடன் வேண்டுகிறேன்.

01. புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த கிளிநொச்சியில் நடைபெற்ற நீதிமன்றக் கட்டடத் தொகுதியின் திறப்பு விழாவில் தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் கலந்து கொண்டு உரையாற்றினார். தனக்கு ஓய்வு வழங்குமாறு தலைவரிடம் கோரிக்கை விடுத்தார் என்று அந்த உரையில் அவர் குறிப்பிட்டார். தனது வேண்டுகோளுக்குப் பதிலளித்த தலைவர் உங்களுக்கு ஓய்வு சாகும்போதுதான் கிடைக்கும் எனக் குறிப்பிட்டார் என்று அவர் மேலும் தெரிவித்தார். அவ்வாறான அந்தக் கட்டடத் தொகுதி தற்போது கைமாறியதும் அங்கு நடைபெற்ற வழக்கொன்றில் போராளிகளைப் பயங்கரவாதிகள் எனக் குறிப்பிட்டவர் சுமந்திரன். ஒரு தரப்பினருக்காக வாதிட்ட இவர் மறுதரப்பினரை இவர்கள் பயங்கரவாதிகளுடன் தொடர்புபட்டவர்கள் எனக் குறிப்பிட்டார். போராளிகள் பற்றிய இத்தகைய கருத்தைக் கொண்ட ஒருவரை தமது வாழ்வையே அர்ப்பணித்த பாலா அண்ணாவுடன் ஒப்பிடுவது சகிக்க முடியாததாகும். இதனை பாலா அண்ணாவை அவமதிக்கும் முயற்சியாகவே கருதவேண்டியுள்ளது.

02. இனப்படுகொலை பற்றிய தீர்மானம் குறித்து ஏனையோர் குறிப்பிடும்போது உள்ளூர் விசாரணையே போதும் என விடாப்பிடியாக நின்றவர் சுமந்திரன். இவரை மீறிக் காரியங்கள் நடந்தபோது அரசுக்கு கால அவகாசம் வழங்கும் முயற்சிக்காகக் கடுமையாக உழைத்தவர். இனப்படுகொலை என்ற தீர்மானத்தைக் கொண்டு வருவதற்குப் போதிய சாட்சியங்கள் இல்லை எனக் கருத்துரைத்தவர் இவர். சாட்சியங்களை ஆதாரங்களைத் திரட்டும் பணி மக்களின் வாக்குகளைப் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே உரியது. அந்தக் கடமையைச் செய்யத் தவறியதுடன் அரசை எப்படிக் காப்பாற்றுவது என்பது பற்றிய சிந்தனையுடன் செயலாற்றியவர் சுமந்திரன். இனப்படுகொலை விவகாரத்தை நீர்த்துப் போகச் செய்வதில் இவரது பங்கே மிகக்கூடுதலானது. ஜெனிவாவில் அரசுக்கு எதிராகச் செயற்பட மாட்டோம் என இவர் கூறும் காணொலி சமூகவலைத்தளங்களில் உலாவருகின்றது.

03. அரசியல் கைதிகள் விவகாரத்தை இவரிடமே ஒப்படைத்தது கூட்டமைப்பு. இவரது முயற்சியினால் எந்தவொரு முன்னாள் போராளியாவது விடுதலை செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. மாறாகத் தான் அரசுத் தரப்புடன் கிரிக்கெட் விளையாடியமை தனது இராஜதந்திரம் என்றும் கோட்டாபயவுடன் டின்னரில் கலந்து கொள்ளும் தான் உங்களது விடுதலையைச் சாத்தியமாக்குவேன் எனப் புழுகினார். அரசியல் கைதிகளின் குடும்பத்தினரின் வறுமையை தேர்தல் செலவுக்குப் பணமில்லாத விடயத்துடன் ஒப்பிட்டவர் இவர். உண்மையில் அரசியல் கைதிகளின் விடயத்தில் தலைகீழாகவே இவர் செயற்பட்டார். கட்டாய ஆட்சேர்ப்பு விடயத்தில் உண்மை வெளிக்கொணரப்படுவது முக்கியம். அப்படியென்றால் தான் உண்மையான நல்லிணக்கம் என்று நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டார். இதேவேளை உண்மையைக் குழிதோண்டிப் புதைக்கவே ஜெனிவாவில் முயன்றார். யுத்தத்தில் நிகழ்ந்தது இனப்படுகொலையே என வடக்கு மாகாண சபை தீர்மானம் நிறைவேற்றியதைத் தொடர்ந்து, ஏற்பட்ட சதி முயற்சிகளில் – அரசியல் குழப்பங்களின் கதாநாயகன் இவரே. இது யு. எஸ். ஹோட்டலில் நடந்த விடயங்கள் தொடர்பாக விந்தன் கனகரத்தினம் வெளியிட்ட தகவல்கள் மூலம் தெரிய வருகின்றது. உண்மையில் இவர் யாருடைய தரப்பாக செயற்படுகிறார் என்பதை விளக்க இந்த உதாரணங்கள் போதும்.

04. உண்மையில் தமிழரின் ஆயுதப் போராட்டத்தை மட்டுமே ஏற்கவில்லை இவர். இன்றுவரை தாம் ஆயுதமேந்தியது தவறு என்று கூறாத ஜே.வி.பியினரின் வழிமுறைகளை ஏற்கிறார். தமிழரின் அடிநாதமான கோரிக்கையான வடக்கு – கிழக்கு இணைப்பைத் தகர்த்தவர்கள் சுனாமிக் கட்டமைப்பை நொருக்கியவர்கள் என்ற வரலாறு ஜே.வி.பிக்கு உண்டு. இக்கட்சியின் தலைவர் ரோஹண விஜேவீரவின் கொள்கைகளில் ஒன்று மலையக மக்கள் இந்தியாவின் கைக்கூலிகள் என்பது. இந்த வரலாற்றையெல்லாம் தெரிந்து கொண்டே அவர்களுடன் சிவப்புச் சட்டை அணிந்து கொண்டு மே தின நிகழ்வில் கலந்து கொண்டவர் இவர். மந்திரிப் பதவியைத் தவிர எந்த அரசியல் முன்னேற்றத்தையும் இவரால் காண முடியாது என்ற யதார்த்தத்தை நன்கு தெரிந்து கொண்டே இவர் மக்களை ஏமாற்ற முயல்கின்றார். வடக்கு – கிழக்கு இணைப்பு, சுனாமிக் கட்டமைப்பு விவகாரங்களில் தமிழர் தரப்புக்காக நீதிமன்றில் வாதிட முன்வராத இவர், ஜே.வி.பியின் நிலைப்பாட்டுடனேயே உள்ளார் எனக் கருதவேண்டியுள்ளது.

05. ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்துவிட்டது என்பது முள்ளிவாய்க்காலில் தலைவர் எடுத்த முடிவு. களத்தில் நின்ற போராளிகளுக்கும், போராட்ட மண்ணில் நின்ற பொதுமக்களுக்கும் நன்கு தெரியும். தனது துரோகத்தனத்தையும் தவறுகளையும் சுட்டிக்காட்டுவோரை ஆயுதப் போராட்டம் தொடர வேண்டும் என விரும்புபவர்களாக சித்திரிக்க முயல்கிறார் சுமந்திரன். அத்துடன் இவர்கள் மீது ஒரு கண் வைத்திருங்கள் என மறைமுகமாக சைகை காட்டுகின்றார் படைத்தரப்புக்கு. உணர்வுபூர்வமாக உயிரைக் கொடுத்து நடைபெற்ற ஆயுதப் போராட்டத்தின் – தேசியத்தின் பெயரால் கிடைத்த வாக்குகளால்தான் தேசியப் பட்டியல் உறுப்பினர் பதவி கிடைத்தது என்பதை நன்றிகெட்டத்தனமாக மறந்து விட்டார். யோக்கியமானவராக இருந்தால் இப்போது சொல்லும் கருத்துக்களை இவர் விசுவாசிக்கும் ரணிலின் கட்சி சார்பில் தெரிவித்து அரசியலில் இறங்கியிருக்கலாமே?

தமிழ்த் தேசிய நீக்கத்துக்காகத் துடிக்கும் இவர் தான் ஒரு இலட்சம் வாக்குகள் பெறுவேன் என்பது உணர்வுபூர்வமான இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்ட மாவீரர்களின் ஆன்மாவையும் பொருட்படுத்தாததைச் சுட்டிக்காட்டுகின்றது. எனவே. லெப். கேணல் கில்மன், பிரிகேடியர் தீபனின் சகோதரர், பெற்றோர் உட்பட அனைத்து மாவீரர் குடும்பத்தினரும், முன்னாள் போராளிகளும் சுமந்திரனின் இந்த சவாலை ஏற்க வேண்டும். இவரைத் தோற்கடிக்க சாத்தியமான சகலவற்றையும் செய்ய வேண்டும்.

மாவீரர் அறிவிழியின் அப்பாவாக நான் இந்த வேண்டுகோளை விடுக்கிறேன். விடுதலைப் புலிகளின் முதல் மாவீரர் சங்கர் உட்பட இந்தப் போராட்டத்தில் ஆகுதியாகிய வடக்கு – கிழக்கு மற்றும் ஏனைய பகுதிகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மாவீரர்கள் தளபதிகளின் உணர்வுகளைப் புரிந்தவன் என்ற வகையில் மாவீரருக்குச் செய்யும் கௌரவமாக சுமந்திரனின் எதிர்பார்ப்பைத் தோற்கடிக்கும் பணியில் கைகோர்க்கும்படியாக அன்புடனும் உரிமையுடனும் வேண்டுகிறேன். எமது மாவீரர்கள் சுமந்திரன் கிளிநொச்சி நீதிமன்றில் குறிப்பிட்டது போன்று பயங்கரவாதிகள் அல்ல என்பதைக் கூட்டாக அவருக்கு உணர்த்துவோம். இது எமது வரலாற்றுக் கடமை. துயிலுமில்லத்தில் சுடரேற்றுவதற்கு ஒப்பானது – என்றுள்ளது.

## 'யாழ்பாடி – 5' கலாசார மலருக்கு ஆக்கங்கள் கோரப்படுகின்றன

யாழ்ப்பாண பிரதேச கலாசாரப் பேரவையினால் வெளியிடப்படவுள்ள' யாழ்பாடி – 5' கலாசார மலருக்கான ஆக்கங்கள் கோரப்படுகின்றன.

2021 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் நகரமாகி 400 ஆண்டுகள் நிறைவுறுவதனால் அதனை நினைவு கூரும் வகையில் யாழ் நகர் – 400 எனும் தொனிப்பொருளில் ஆக்கங்களை யாழ் மாவட்டத்தை பிரதிபலிக்கின்ற எழுத்தாளர்கள், கலைஞர்கள், கல்விப்புலம் சார்ந்தவர்கள், யாழ்ப்பாண பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் நிறுவனங்களைச் சார்ந்த படைப்பாளிகள் யாழ்ப்பாண பிரதேசத்தின் கலை கலாசாரம், வரலாறு, சமூக வாழ்வியல், தொல்லியல், நாட்டுப்புறவியல், ஆன்மீகம், மரபுரிமைகள் போன்ற விடயங்களைப் பிரதிபலிக்கும் வகையிலான கட்டுரை, கவிதை, சிறுகதை, ஆவணத்தரவுகள், நேர்காணல்கள் போன்ற எழுத்தாக்கங்களை வழங்க முடியும். படைப்பாளிகளின் ஆக்கங்களுக்கு களம் அமைத்துக் கொடுக்கும் வகையிலும் யாழ்ப்பாணம் நகரமாகி 400 ஆண்டினை சிறப்பிக்கும் வகையிலும் மற்றும் பிரதேசத்தின் தரவுகளை வெளிக்கொணரும் வகையிலும் இம்மலர் அமையவுள்ளது.

ஆக்கங்களை வழங்க விரும்புவோர் எதிர்வரும் 30.09.2020 ற்கு முன்னர் யாழ்ப்பாண பிரதேச கலாசார பிரிவிற்கு அனுப்பி வைக்குமாறும் மலர் குழுவின் பரிசீலனையின் பின்னர் ஆக்கங்கள் பிரசுரிக்கப்படுமெனவும் பிரதேச செயலாளரும் கலாசாரப் பேரவைத்தலைவருமான எஸ்.சுதர்சன் தெரிவித்துள்ளார்.

## விஜயதாஸவுக்கு எதிராக விரைவில் சட்டம் பாயும்

### ராஜித சேனாரத்ன ஆவேசம்



கொழும்பு, ஜூலை 03

அவன்காட் விவகாரத்தில் தன்மீது பொய்யான குற்றச்சாட்டு முன்வைத்துள்ள பொதுஜன பெரமுன வேட்பாளர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்வேன் என முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அவன்காட் நிறுவனத்தினர், 3 வருடங்களுக்கு முன்பு 5 மில்லியன் கொடுத்ததாகக் கூறினார்கள். நேற்று இரவு முதல் 2 கோடியாக அந்த தொகை மாற்றம் அடைந்து காணப்படுகின்றது.

இவ்விடயம் தொடர்பாக விஜயதாஸ ராஜக்ஷ மற்றும் அவன்காட் நிறுவதற்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானித்துள்ளேன்.

அதாவது யாருக்கு வேண்டுமென்றாலும் முடியும் தங்களது விருப்பத்துக்கு ஏற்றவாறு காசோலை புத்தகத்தைக் கொண்டுவந்து, அதில் தொகையொன்றை எழுதி வழங்க முடியும். அதனைப் பெற்றுக்கொண்டவர் ஒப்புக்கொள்ள வேண்டும்.

இதற்கு முன்னர் அவன்காட் நிறுவனத்தின் உரிமையாளர் 50 கோடி ரூபா தங்களுக்காக செலவிட்டதாக கூறியுள்ளார்.

அவ்வாறாயின் நேற்று இரவு மிகுதி 50 கோடி ரூபாயை விஜயதாச ராஜபக்ஷ பெற்றிருப்பார்.

இப்போது என்ன சொல்கிறார். அவருக்கு இவ்வளவு கொடுத்தேன், இவருக்கு இவ்வளவு கொடுத்தேன், என்கிறார்.

அந்த நிறுவனம் வியாபாரத்தில் ஈடுபடவில்லை. மோசடி செயற்பாடுகளில்தான் இதுவரை காலமும் ஈடுபட்டு வந்துள்ளது – என்றார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.07.2020 இல் வெளியிடப்பெற்றது.